T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

## பொருளியல்

பதிவு எண்: | | | | | |

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: **20×1=20**

1) இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்காணும் வழிகளில் எது சரிசெய்யும்?
அ) சுங்கத் தீர்வையைக் குறைத்தல் ஆ) ஏற்றுமதி வரியை அதிகரித்தல்
இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல் ஈ) இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

2) பன்னாட்டுப் பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) வாஷிங்டன் டி.சி ஆ) நியூயார்க் இ) வியன்னா ஈ) ஜெனிவா

3) கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.
i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது.
ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும் இ) இரண்டும் ஈ) இரண்டும் இல்லை

4) கார்பன் மோனாக்சைட் அதிகமாவதில் பங்களிப்பைச் செய்வது
அ) மோட்டார் வாகனங்கள் ஆ) தொழில் செயற்பாடுகள்
இ) நிலையாக எரிபொருள் எரிக்கும் கருவிகள் ஈ) மேற்கூறிய அனைத்தும்

5) NNPயிலிருந்து வெளிநாட்டு காரணிகளின் நிகர வருமானம் கழிக்கப்பட்டால் கிடைக்கும் நிகர மதிப்பு .............
அ) மொத்த நாட்டு உற்பத்தி ஆ) செலவிடக்கூடிய வருமானம்
இ) நிகர உள்நாட்டு உற்பத்தி ஈ) தனிநபர் வருமானம்

6) எந்த பொருளாதாரத்தில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?
அ) முதலாளித்துவப் பொருளாதாரம் ஆ) சமதர்மப் பொருளாதாரம்
இ) உலகமய அமைப்பு ஈ) கலப்புப் பொருளாதாரம்

7) பேரியல் பொருளாதாரத்தின் வேறுபெயர் யாது?
அ) விலை கோட்பாடு ஆ) வருவாய் கோட்பாடு
இ) அங்காடி கோட்பாடு ஈ) நுண்ணியல் கோட்பாடு

8) கீன்சின் கருத்துப்படி, முதலீடு MECஐயும் ............. சார்ந்தது.
அ) தேவையையும் ஆ) அளிப்பையும் இ) வருவாயையும் ஈ) வட்டிவீதத்தையும்

9) பற்று அட்டை என்பது ............. எடுத்துக்காட்டு ஆகும்.
அ) கட்டளைப் பண ஆ) காகிதப்பண இ) நெகிழிப்பண ஈ) கடன்பண

10) பெருக்கியின் மதிப்பு
அ) 1/(1–MPC) ஆ) 1/MPS இ) 1/MPC ஈ) அ மற்றும் ஆ

11) 2016 இல் பணமதிப்பு நீக்கம் எந்தெந்த மதிப்புப் பணங்களுக்கு ஏற்படுத்தப்பட்டது?
அ) ₹ 500 மற்றும் ₹ 1000 ஆ) ₹ 1000 மற்றும் ₹ 2000
இ) ₹ 200 மற்றும் ₹ 500 ஈ) மேற்சொன்னவை அனைத்தும்

12) U என்பது எதைக் குறிக்கிறது?
அ) விடுபட்ட காரணிகள் ஆ) திட்டப்பிழை
இ) பிழை ஈ) தொடர்ச்சியற்றக் காரணி

13) ஒரு சிதறல் விளக்கப்படத்தில் ஒரு மாறி அதிகரித்துச் செல்லும்பொழுது மற்றொரு மாறி குறைந்து சென்றால் உடன்தொடர்புக்கெழுவின் அளவு எவ்வாறாக இருக்கும்?
அ) முழுநேர்கணியாக ஆ) முழுஎதிர்மறையாக இ) எதிர்மறையாக ஈ) 0

14) கீழ்க்காணும் எந்த திட்டம் வேளாண்மையும் கிராமப் பொருளாதாரத்தையும் மையமாகக் கொண்டது?
அ) மக்கள் திட்டம் ஆ) பாம்பே திட்டம்
இ) காந்தியத் திட்டம் ஈ) விஸ்வேசுவரய்யா திட்டம்

15) மின்னணு கழிவுகளுள் ............. என்ற பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.
அ) திடக்கழிவுகள் ஆ) குப்பைக்கழிவுகள்
இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

16) பெனிலக்ஸ் என்பது இதன் வடிவமாகும்.
அ) தடையற்ற வாணிகப் பகுதி ஆ) பொருளாதார ஒன்றியம்
இ) பொது அங்காடி ஈ) சுங்கவரி ஒன்றியம்

17) காப்புரிமை, பதிப்புரிமை, வாணிக இரகசியம் முதலானவை .......... உடன்தொடர்புடையவை.
அ) வணிகம்சார் சொத்துரிமை ஆ) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
இ) காட்ஸ் ஈ) NAMA

18) எம்.என்.இராய் வழங்கியத் திட்டம் கீழ்க்காண்பவைகளில் எது?
அ) காங்கிரஸ் திட்டம் ஆ) மக்கள் திட்டம்
இ) பாம்பே திட்டம் ஈ) இவை எதுவுமில்லை
19) சுற்றுச்சூழல் சிக்கல் உண்மையாகவே சமுதாயச் சிக்கல் என்று கூறியவர் யார்?
அ) R.V. அய்யாஸ் ஆ) பிரடரிக் ஹேயக் இ) மார்கண்டேயா ஈ) ஹிலரி
20) சுற்றுப்புறச்சூழலுக்கும் மற்றும் மேம்பாட்டிற்கான உலக அமைப்பு அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு
அ) 1967 ஆ) 1957 இ) 1987 ஈ) மேற்கூறிய அனைத்தும்

பகுதி - ஆ

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **7×2=14**

21) உய்த்துணர் புள்ளியியல் என்றால் என்ன?
22) நிதி ஆயோக் பற்றி குறிப்பு வரைக.
23) உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
24) வரி, கட்டணம் வேறுபடுத்துக.
25) எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
26) "சே" விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.
27) தேக்கவீக்கம் என்றால் என்ன?
28) வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக.
29) பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிக்கார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?
30) ஒட்டுறவு என்பதனை வரையறு.

பகுதி - இ

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்:
வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்: **7×3=21**

31) தனிமனிதர் வருமானத்திற்கும் செலவிடக்கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?
32) கீன்சின் கோட்பாட்டை விளக்குக.
33) தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள ஒற்றுமைகளை எழுதுக.
34) பல தரப்பு ஒப்பந்தம் என்றால் என்ன?
35) வாணிகக் கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்தல் சமநிலைக்கும் இடையேயான மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக.
36) பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.
37) பணமதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.
38) தன்னிச்சை முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
39) பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
40) சரத்து 269ன்படி மத்திய அரசால் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் யாவை?

பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: **7×5=35**

41) அ) பல்வேறு வகையானத் திட்டமிடல் வகைகளை விவரி. **(அல்லது)**
ஆ) குறிப்பு எழுதுக: (அ) சார்க் (ஆ) பிரிக்ஸ்
42) அ) ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிக வீத வகைகளை விவரி. **(அல்லது)**
ஆ) வணிக வங்கிகளின் பணிகளை விளக்குக.
43) அ) தேசிய வருவாயைக் கணக்கிடுவதால் ஏற்படும் சிரமங்களை விவரி. **(அல்லது)**
ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சன் ஒட்டுறவுக்கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விலை X | 10 | 12 | 14 | 15 | 19 |
| அளிப்பு Y | 40 | 41 | 28 | 60 | 50 |

44) அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி. **(அல்லது)**
ஆ) கீன்சின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.
45) அ) பணத்தின் பணிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.
46) அ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விவரி. **(அல்லது)**
ஆ) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.
47) அ) வறுமையின் நச்சு சுழற்சியினை வரைபடத்துடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

-----------